லக்கி லூக்

# மேடையில் ஒரு மன்மதன்!



இந்த வருட ஆண்டு மலரில்

# இரத்தப் படலம் - VI




'10 ஆண்டுகளாய் தொடர்ந்திடும்
ஒரு தேடல் படலம்.....

# ஹாட் - லைன்!




வாசக நண்பர்களே,

வணக்கம். மீண்டும் ஒரு வெளிநாட்டுப் பயணம்! So - மீண்டும் இதழில் தாமதம்! தவிரவும் இந்த இதழ் முழு வண்ணத்தில் என்பதால் தயாரிப்பிலும் வேலை பன்மடங்கு அதிகரித்து தாமதத்தை அதிகரித்து விட்டது! எனினும் –

உங்கள் காமெடி கௌ-பாயின் முழு நீள - முழு வண்ணக் காமெடியைப் படித்தவுடன் எங்கள் மீதான கோபம் கரைந்து விடும்! **"மேடையில் ஒரு மன்மதன்"** உங்களை நிச்சயம் கவருவான்! படித்து முடித்தவுடன் உங்கள் விமர்சனங்களை கட்டாயம் அனுப்ப வேண்டுகிறேன்.

சென்ற இதழான (டெக்ஸ் வில்லரின்) **"மரண முள்"** இதழுக்கு 70% பாராட்டு; 30% கண்டனம்! பாராட்டுக்குக் காரணம் சொல்லத் தேவையில்லை! ஆனால் கண்டனத்திற்குக் காரணம் :

a) வழக்கமான டெக்ஸ் பாணியில் 'டமால்'; 'டுமீல்' அதிகம் கிடையாது. ஆக்ஷன் மிகக் குறைவு.

b) டெக்ஸ் குழுவுக்கு வேலை அதிகம் கிடையாது. விஞ்ஞானி தான் முக்கியமான வேலைகளை செய்கிறார்.

டெக்ஸ் வில்லர் கதைகள் என்றாலே அதீத ஆக்ஷன் இருக்க வேண்டுமென்று வாசகர்கள் விரும்புவது புரிகிறது! So - அடுத்த டெக்ஸ் சாகஸமான **"நள்ளிரவு வேட்டையில்"** அமர்களப்படுத்தி விடுவோம்! அதிரடி ஆக்ஷன் கதை இது!

அடுத்த இதழாக நமது 12வது ஆண்டுமலரில் **இரத்தப் படலம் பாகம் 6** வருகிறது! அறிமுகமோ முன்னுரையோ இந்தத் தொடருக்குத் தேவையில்லை என்பதால் ஒரே ஒரு விஷயத்தை மட்டும் இங்கே சொல்லிட நினைக்கிறேன். இந்த இதழ் - **இரத்தப் படலம் 5-ம் பாகத்தைப்** போலவே **பெரிய சைஸில்,** ஒரிஜினல் சித்திரங்களுடன் வரயிருக்கிறது! So - ஓவியர் வான்ஸின் மாயாஜாலத்தை நான் ரசித்தது போலவே நீங்களும் ரசிக்கலாம்!

ஆகஸ்ட் மாதம் மாடஸ்டி பிளைஸியின் புதியதொரு சாகஸம் வரவிருக்கிறது! விபரங்கள் அடுத்த இதழில்!

இந்தப் பகுதியை முடிப்பதற்கு முன் இன்னொரு விஷயம்! டெக்ஸ் வில்லர் குழுவினரின் புதியதொரு முழு நீ.....ள..... சாகஸம் அதி அற்புதமான புது பாணி சித்திரங்களுடன் தயாராகி வருகிறது! இந்தக் கதையின் நீளம் - 330 பக்கங்கள்! இதை தனித்தனி பாகங்களாகப் பிரிக்காமல் ஒரே கதையாக - ஒரே இதழில் வெளியிடுவதென்றால் விலையை ரூ. 30/-என்று வைக்க வேண்டி வரும்! தீபாவளி மலராக அப்படியே போடலாமா? அல்லது மூன்று பாகங்களாகப் பிரித்து ரூ.10/- வீதம் மூன்று மாத இதழ்களாகப் போடலாமா? என்ற குழப்பத்தில் இருக்கிறேன்! உங்களின் கருத்தை தெரிந்து கொண்டு தீர்மானம் பண்ணலாமென்று இருக்கிறேன்! So - இதைப் பற்றிய உங்கள் எண்ணங்களை எழுதியனுப்புங்களேன்!

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்! அது வரை - bye!

அன்புடன்,

# மாதம் ஒரு வாசகர்



| | | |
|---|---|---|
| வாசகர் பெயர் | : | **M. அருள்மொழிவர்மன்** சுருக்கமாக **அருள்** |
| முகவரி | : | 88-C,W-I, கச்சேரி வீதி,<br>காட்டுமன்னார்கோவில் - 608 301. |
| கல்வித்தகுதி | : | M.B.A. படிக்க விருப்பம். (தற்போது? சஸ்பென்ஸ்) |
| பொழுதுபோக்கு | : | செஸ், கிரிக்கெட், Satellite டிவிகள் |
| லயன் காமிக்ஸ் படிப்பது எத்தனை காலமாய்? | : | ஏறக்குறைய 5 வருட காலமாய் |
| லயன் காமிக்ஸ் அறிமுகமானது எப்படி? | | ஏதேச்சையாக கடையில் வாங்கி, பிறகு தேடித் தேடி வாங்குகின்றேன். |
| நீங்கள் படிக்கும் இதர பத்திரிகைகள் | : | இந்தியா டுடே, சூப்பர் நியூஸ், குமுதம், ஆனந்த விகடன், கல்கி, சூப்பர் நாவல், க்ரைம் நாவல், தினமலர். |
| இதுவரை வந்த கதைகளில் மிகவும் பிடித்தது | : | திகிலில் : பழைய கதைகள் அனைத்தும்<br>லயனில் : ஒரு சில கதைகளைத் தவிர அனைத்தும் பிடிக்கும்! |
| குறிக்கோள் | : | சிறந்த ஒளிப்பதிவாளராய் வளர்தல், விஜயன் சாரிடம் உதவியாளராய்ச் சேர்ந்து லயனைப் போன்று வேற காமிக்ஸ் ஆரம்பித்தல். (அனுமதிப்பீர்களா விஜயன் சார்?) |

லயன் வாசகர் ஸ்பாட்-லைட்!

# சிரிப்பின் நிறம் சிகப்பு

STORY & ART BY: Disney (SRILANKA)





லயன் வாசகர் ஸ்பாட் லைட்!
சிரிப்பின் நிறம் சிகப்பு
STORY, DIALOGUE & ART BY: Disney (SRILANKA)
TOY SHOP இற்கு போய் தம்பிக்கு நாய்ப்பொம்--மை வாங்கி வருவோம்.
DAD எங்கே போகிறோம்
DAD! கவனம் நாய் கடிக்கும்!
பயப்படாதே கண்ணா! குரை--க்கிற நாய் கடிக்--காது.


௭


ஸ்பாட் லைட்!
சிரிப்பின் நிறம் சிகப்பு
STORY, ART & DIALOGUE BY:
Disney (SRI LANKA)
மீனே உனக்கு என்ன வரம் வேண்டும்
இறைவா! எனக்கு இரண்டு கைகள் கொடு
தந்தேன் மீனே!
நன்றி இறைவா!
FISH BAIT
காத்திருக்கேன் மீனை தூண்டி-லிட நானே
2 HOURS LATER
FISH BAIT

# மாதம் ஒரு ஹீரோ!



பெயர் : **S. விஜயன்,**

வயது : 35 (உத்தேசமாக)

கல்வித்தகுதி : Degree Holder

தொழில் : ஆசிரியர் (ஸ்கூலுக்கு அல்ல!)

பொழுது போக்குகள் : ஐரோப்பியப் பயணம் (என்று கூறிக் கொள்ளுதல்)

விரும்புவது : இந்தியாவின் No : 1 தமிழ் காமிக்ஸ் அதிபர் ஆக.

விரும்பாதது : மண்டைக் குட்டுகளை

நம்புவது : இரவுக்கழுகு, XIII, ஸ்பைடர், லக்கி லூக் etc...

நம்பாதது : மின்னல் மனிதனை

சாதனை : தலையங்கத்தையே வாசகர்கள் விரும்பும் வண்ணம் அமைத்தது

நீ.கால சாதனை : அதிகமான ஹீரோக்களை அறிமுகப்படுத்திய ஒரே காமிக்ஸ் அதிபர்.

எழுதியவர்

**M. ARUL,,**
88C/WIKACHERI STREET,
KATTUMANNARKOIL - 602 301. S.A.V. DT.




யார் கொலையாளி? கண்டுபிடியுங்கள்!



## வாசகர் கடிதம்

**M. சாதாத் அலி,** திருநெல்வேலி.

மாடஸ்டி & கார்வின் சாகசம் மிக அருமை. இது போன்ற கதைகளை அடிக்கடி வெளியிடுங்கள். அட்டைப்படம் மிக மோசம்.

**G. சீனிவாசன்,** தருமபுரி.

ஆவியின் பாதையில் சூப்பர் கதை, அதை விட அட்டைப்படம் super.

**T. சபாபதி,** வேளாங்கண்ணி.

வாசகர் ஹாட்லைன்'ல் வத்தலக்குண்டு வாசகரின் கருத்தை நான் எதிர்க்கிறேன். அவருடைய குடும்பத்திற்கு வேண்டுமானால் ஸ்பைடர் ஆர்ச்சி கதைகள் பிடிக்காமல் இருக்கலாம். ஆனால் எல்லோருக்கும் அப்படியில்லை. இதுவரை நான் அறிந்த காமிக்ஸ் நண்பர்களிடையே எவருமே ஸ்பைடர் ஆர்ச்சி கதைகளை வெறுக்கவில்லை. என்னைப் பொறுத்தவரை ஸ்பைடர்தான் இன்னும் சூப்பர் ஹீரோ. நான் காமிக்ஸ் படிக்க ஆரம்பித்ததே ஸ்பைடர் கதைகளிலிருந்து தான். மேலும் 12, 13 வயதுக்கு மேற்பட்டவர்கள் அந்த கதைகளை விரும்புவதில்லை என்பதும் ஏற்க முடியாதது. எனக்கு வயது 19 ஆனால் இன்னும் ஸ்பைடர், ஆர்ச்சியின் தீவிர ரசிகன் நான். எனவே இம்மாதிரியான வாசகர்களின் கருத்துக்களை பொருட்படுத்த வேண்டாம் என கேட்டுக் கொள்கிறேன்.

**S. ராஜா,** திருநெல்வேலி.

ஆவியின் பாதையில்! அருமையான கதை. அட்டைப்படம் சூப்பர். 'நரகத்தைப் பார்த்தேன்'! மிகவும் கொடூரமாக உள்ளது.

## க்ரைம் - க்விஸ் 28 விடை

சரியான விடையை எழுதி பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி வாசகர்கள் இதோ!

S. ராஜா,
S/o, A. சோமசுந்தரம்,
124/2, பெருமாள் கீழரதவீதி,
திருநெல்வேலி - 627 001.

வி. விஸ்வபாலாஜி,
த/பெ. வி. வைத்தியலிங்கம்,
337 / I பாம்பாட்டி தெரு,
கீழவாசல், தஞ்சாவூர்.

வி. வடிவேல்,
84, திருவள்ளுவர் புறம், 12வது தெரு,
சூளைமேடு, சென்னை - 94.

இவர்கள் அனைவருக்கும் ரூ. 50 மதிப்புள்ள பரிசுப்பொருள் பரிசாக அனுப்பப்படும்.



## சரியான விடை:

எல்லோரும் நாயின் கழுத்தில் தான் கயிற்றை கட்டி கொண்டு செல்வார்கள். ஆனால் ஸ்ட்ராங்குலர், நாயில் கழுத்தில் கட்ட வேண்டிய கயிற்றை கையில் கொண்டு சென்றார். இதை கொண்டு டேஞ்சர் கண்டுபிடித்தார்.

இம்மாத, க்ரைம் க்விஸ் - 30க்கு பதில் அனுப்பும் போது கீழ்க்கண்ட கூப்பனை ஒட்டி அனுப்பிட வேண்டும்! விடைகளை போஸ்ட்கார்டில் மட்டுமே எழுதலாம்!

**க்ரைம் - க்விஸ் - 30**
**C/o, பிரகாஷ் பப்ளிஷர்ஸ்,**
**த.பெ. எண்: 374,**
**சிவகாசி - 626 123.**

கதை : கோஸினி
சித்திரம் : மோரிஸ்
தமிழில் : S. விஜயன்

# மேடையில் ஒரு மன்மதன்!






ஒத்திகையா?
அடியேனை அறிமுகப்படுத்திட அனுமதியுங்கள்! என் பெயர் விடேகர் பால்டிமோர்!
விடேகர் நாடக கம்பெனியின் நிர்வாக இயக்குநர்!
TROUP WHITTAKER BALTIMORE
டெக்ஸாஸ் மாநிலத்தில் முதல் முறையாக எங்கள் குழு நாடகம் போட வந்திருக்கிறது! ஸோ - ஒத்திகை பார்த்துக் கொண்டிருந்தோம்!
இதோ நிற்கும் யுவதியின் பெயர் ஜில்லி! எங்கள் நாடகத்தின் ஹீரோயின்!
இவர் மிஸ்டர் டார்குலா...! வில்லன் வேஷத்தில் அசத்தும் அசகாய சூரர்!
இறுதியாக மிஸ்டர் லஸ்டி...! மேடையில் நாடகத்திற்கான ஏற்பாடுகளை செய்திடுவான்...
.... அத்தோடு அடம்பிடிக்கும் நேயர்களைக் கூட கைதட்டச் செய்யும் திறமைசாலி!
ஹலோ!
அந்த சின்னப் பாப்பா?
வெறும் பொம்மை! அன்பரே - நாடக உலகில் இதெல்லாம் சகஜமே!
?!
“மேடையில் ஒரு மன்மதன்” எனும் எங்கள் நாடகத்தில் இந்தப் பாப்பா பொம்மை ஒரு முக்கிய கதாபாத்திரம்! நாடகத்தின் கதை - வசனம் - டைரக்ஷன் - ஹீரோ எல்லாமே நான் தான்!
எங்களோடு உணவருந்திச் செல்லலாமே?
நன்றி! ஆனால் நான் நத்திங் கல்ச்சிற்கு உடனே போயாக வேண்டும்.
நத்திங் கல்ச்சா? அடடே - நாங்கள் கூட நாளை இரவு அங்கே தான் நாடகம் போடப் போகிறோம். எங்களது அன்பளிப்பாக இந்த டிக்கெட்டை ஏற்றுக் கொள்ளுங்கள்! ரொம்பத் தரமானதொரு நாடகத்தை கண்டு களிக்கலாம்!



நடனமாடும் பெண்கள்; குதிரை விரட்டு போன்ற பொழுது போக்குகளுக்கிடையே நாடகக் கலை தலை தூக்க முயன்று கொண்டிருந்தது. ஆனால் கரடுமுரடான மேற்கத்திய ஆசாமிகளுக்கு நிஜத்திற்கும் நிழலுக்குமிடையிலான வேறுபாடை கண்டு கொள்ளும் அளவிற்கு நளினம் கிடையாது என்பதை குறிப்பிட்டாக வேண்டும்.
நாடகங்களில் மூன்று விதங்கள் நடைபெற்று வந்தன. முதலாவது : ஷேக்ஸ்பியரின் அமர காவியங்கள்!
இன்று ரோமியோ & ஜுலியட் நாடகம்!
இங்கே நம் இருவரில் - ஒருவருக்கு மட்டுமே உயிர் தப்ப வாய்ப்புண்டு!
சாகப் போவது நானில்லை!
அதையும் பார்த்து விடலாமே!
ரோமியோ தான் ஜெயிப்பான்! பத்து டாலர் பந்தயம்!
டையில்ட் தான் ஜெயிப்பான்! 25 டாலர் பந்தயம்!
அப்படிப் போடு!
போலி சண்டை போடக் கூடாது!
பயலை விடாதே - அமுக்கு!
அப்படித்தான் ரோமியோ!
ரோமியோ ஜெயிச்சுட்டான்!
?!
எனக்கு நீ 10 டாலர் தரணும்!
மோசடி!
டையிட்டை அவன் தொடக் கூட செய்யலை!
எல்லாம் டுபாக்கூர்
இந்த நாடகத்தை எழுதின ஷேக்ஸ்பியர் எங்கேப்பா?
மோசடிப் பேர்வழிகளுக்கு நாம் கொடுக்கும் மாமூலமான மரியாதையை செய்திடலாமா?
?
?
தார்



நாடகத்தில் இரண்டாவது விதம் - உண்மை சம்பவங்களின் மறுபதிப்பு! ஆனால் இதில் நிறைய சிக்கல் உண்டு!
உதாரணத்திற்கு இந்த நாடகத்தைப் பாருங்களேன்! செவ்விந்திய தலைவரான ''பச்சை யானையை'' கைது செய்த கேப்டன் ரோடியோவின் நாடகம் இது!
இ.. இந்த பகுதிக்கு நாம் வந்திருக்கவே கூடாது!
அட... இது மேடையில் ஏறியவுடன் வரும் மாமூலான கூச்சமும், நடுக்கமும் தானப்பா!
மேடைப் பயமா? நாடகம் பார்க்க வந்திருக்கும் கும்பலைக் கொஞ்சம் பாரேன்!
மேற்கத்திய மக்களுக்கு மிகவும் பிரியமான நாடக வகை - உணர்ச்சிமயமான குடும்பக் கதைகளே!
ஆ...ஆ..ஆ! என் செல்லத் தம்பி மீது உன் சுண்டு விரல் கூட படக் கூடாது! யாராவது காப்பாற்றுங்களேன்... உதவி...!
என்னை மணந்து கொள் லிண்டா? இல்லையேல் இந்த பொடிப் பயலை நீ ஈரேழு ஜென்மத்திற்கும் பார்க்க முடியாது!
அட... கௌபாய் ஹீரோ!
நாசமாய் போக!
அழகான இளம் பெண்ணை - அகோரமான வில்லன் வதைக்க - தூய வெள்ளையுடை அணிந்த ஹீரோ உதவிக்கு வந்திட கதை இப்படியாகப் போய்க் கொண்டேயிருக்கும்!
அவளை நெருங்காதே நீசனே!


நத்திங் கல்ச் நகரம் கலாட்டா செய்தால் காலாவதி ஆகிப் போவீர்கள்!
டேய் சோமாறி லக்கி லூக்!
?
டுமில்!
டுமில்!
தடி முண்டம் ஜாக்!
சரியான ஆம்பிள்ளையானால் என் கிட்டே வந்து சொல்லுடா பார்ப்போம்!
நேராக உன் பண்ணைக்குத் தான் போய்க் கொண்டிருந்தேன்! உன்னை ஊருக்குள் பார்க்க முடியுமென்று நினைக்கலை!
புதுசா இன்னைக்கு ஏதோ நாடகம் போடப் போறாங்களாம்! அதைப் பார்க்கத் தான் எல்லோருமே ஊருக்குள் இருக்கானுக!
அது சரி - உன்னோட மாட்டு மந்தையை நல்ல விலைக்கு விற்று விட்டேன்! என் குதிரையில் தொங்கும் பைக்குள் பத்தாயிரம் டாலர் பணம் உள்ளது!
ஹ்ம்ம்ம்... பத்தாயிரத்தில் எவ்வளவு கமிஷன் சாப்பிட்டாயோ?
ஹாண்ட்ஸ் அப்... சீ சீ சீ... லெக்ஸ் அப்! பணத்தை எடு!
எந்தக் குதிரையாவது இப்படி அரை லூஸ் மாதிரி நடந்துக்கிட்டதை பார்த்திருக்கீங்களா? இந்த மனுஷங்க மட்டும் ஏன் தான் இப்படியோ?


பண்ணை பராமரிபபுக்கு இந்தப் பணம அவசரமாய் தேவைப்படுது!
பத்திரமாய் எங்காவது வைத்துத் தொலை!
ஹ்ம்ம்ம்... நல்ல யோசனை தான்! பாங்கில் போட்டு வைக்கலாம்!
BANK
இந்த புறாக் கூண்டுக்கு 'பேங்க்' என்று பெயர் வைத்த மாங்காய் மடையனை எங்கே?
இதோ இங்கிருக்கேன்டா தடிமாடு! அந்தத் துப்பாக்கியை கீழே போட்டுத் தொலை - கையை நசுக்கிக் கொள்ளப் போறே...!
சுருட்டுப் பிடிக்கும் சோமாறி!
மரமண்டை!
இந்தா... இந்தப் பணத்தை பத்திரமாக வைத்திருக்கப் பாரு! தூக்கிட்டு கம்பி நீட்டிடாதே!
ஹ்ம்ம்... எங்கே திருடிய பணமோ? எனக்கு இதில் ஒரு அணா கூட வேணாம்பா சாமி!
வா... போய் ஜில்லுன்னு ஏதாவது சாப்பிடலாம்!
நாளை வந்து பணத்தை வாங்கிக்கிறேன்... அதாவது நாளை வரை உன் பாங்க் திவாலாகாமல் இருந்தால்!
நைட் நடக்கவிருக்கும் நாடகத்திற்காக எல்லாம் ஒழுங்கு படுத்தியிருக்காங்க...! நீ வர்றியா?
யா! ஓசி டிக்கெட் கிடைச்சது!
டேய் மீசைக்காரா... ரெண்டு கிளாஸ் எலிப் பாஷாணம் ஊற்றிக் கொடு!
எலி பாஷாணம் கூட கட்டுபடியாகாதுடா குடிகாரா!



விடேகர் பால்டிமோர் வழங்கும் "மேடையில் ஒரு மன்மதன்" கதை; வசனம்; டைரக்ஷன் விடேகர் பால்டிமோர்
என்னடா பேமானி .. பாங்க்கை 'அம்போ' ன்னு விட்டுட்டு வந்திட்டியா?
உன்னோட பிஸ்தா காசு பத்திரமா இருக்குடா மடையா! ப்ரெட் காவலுக்கு நிற்கிறான்!
ப்ரெட்டா? அவன் காவலுக்கு நின்னு உருப்படவா?
ஹா! ஹா! ஹா!
வாயை மூடு ஜாக்!
சத்தம் - மூச்!
ஐயகோ!... பெற்றோர்கள் மாண்டு போனதிலிருந்து என்னையும் - பச்சிளம் பாலகனான என் தம்பியையும் காப்பாற்ற யாருமிலர்! வறுமையில் வாடுகிறோம்! அந்த நீசன் ஜோன்ஸ் வேறு என்னை சுற்றிச் சுற்றி வந்து தொல்லை கொடுக்கிறான்!
தேம்பல்..
நோ... லிண்டா! உன்னையும் உன் தம்பியையும் காப்பாற்ற நானிருக்கிறேன்...! கௌபாய் ஹீரோ!
அப்படிப் போடு!
பட்! பட்! பட்!
சபாஷ்!
சபாஷ்!
தூள்மா!
சூப்பர்!



முதல் பகுதியை ரசித்தாயா?
எனக்கென்னவோ இந்த கூத்தில் அவ்வளவு நாட்டமில்லைப்பா!
விக்!
ஒரு விஸ்கி கொடுப்பா!
ஷ்ஷ்ஷ்... நாடகம் நடப்பது தெரியலை?
நா.. நாடகமா? எ.. என்ன நாடகம்? வி... விஸ்கி கொடுப்பா!
ணங்!
கொஞ்சம் கூட இங்கிதமே தெரியாத கம்மனாட்டி!
ஆ..ஆ... என் செல்லத் தம்பி மீது உன் சுண்டு விரல் கூடப் படக்கூடாது! யாராவது காப்பாற்றுங்களேன்...! உதவி!
என்னை மணந்து கொள் லிண்டா! இல்லையேல் உன் தம்பியை ஈரேழு ஜென்மத்திற்கும் பார்க்க முடியாது!
ஏய்ய்...
அந்தப் பொண்ணை நெருங்காதேடா!
ஏய்ய்...
அவளை தொட்டே... கொன்னுப்பிடுவேன்!


லேடீஸ் அண்ட் ஜென்டில்மென்... நான் சொல்றதைக் கேளுங்க...!
ராஸ்கல்!
கழுதையில் கட்டி ஊர்வலம் அனுப்பு!
நோ! தூக்கில் போடுவோம்!
டுமீல்!
அமைதி!
அவர் பணியைத் தொடர அனுமதியுங்கள்!
அப்பாவிப் பொண்ணை கலாட்டா பண்ணுவது தான் அவன் பொழைப்பா?
ஒரே போடாக போடுப்பா!
இது ஒரு நாடகம் தான் என்பதை மறந்து விடாதீர்கள்! ஒத்திகைகளுக்கு நானே உதவி செய்துள்ளேன்! அடுத்து பாருங்களேன்... கௌபாய் ஹீரோ வந்து லிண்டாவை காப்பாற்றி விடுவார்!
வெள்ளைக் கௌபாய்!
நாசமாய் போக!
பார்த்தீர்களா? இதோ வந்துட்டார்!
இனி நீங்கள் தொடரலாம்!
ரொம்ப தாங்க்ஸ் மிஸ்டர் லூக்!
அவளைத் தொடாதே நீசனே...!
பாங்கில பணம் கொள்ளை போய் விட்டது!


ஹேய் லக்கி... உனக்குத் தான் இந்த நாடகத்தை பற்றித் தெரியுமே... இப்போ ப்ரெட் சொன்னதும் நாடகத்தில் சேர்த்தியா?
இல்லைன்னு தான் நெனைக்கிறேன்!
நோ! நோ! நிச்சயம் இது நாடகத்தில் கிடையாது!
அடேய் பேமானி .. அந்த கிழவன் ப்ரெட் அவனது பாண்ட்டை காவல் காத்துக் கொள்ளக் கூட லாயக்கில்லைன்னு அப்பவே சொன்னேன்... கேட்டியா?
வ வந்துப்பா ஜாக்... நீ... நீ மெய்யாலுமே கோபமா இருக்கியா? சும்மா டூப் தானே?
டூப்பா? உன் முகரையை பெயர்த்தால் பிறகு தெரியும் - டூப்பா இல்லையான்னு?
ரிலாக்ஸ் ஜாக்!
காசு உன்னது இல்லியே... உபதேசம் பண்ணுவது ரொம்ப சுலபம்!
?
?
?
கும்!
நாடகத் தரம் பற்றி விவாதம் நடக்கிறதா?
நோ! நோ! சும்மா விளையாடுகிறார்கள்!
ஆனாலும் இதற்கு முன் இவ்வளவு வேகமாக விளையாடிப் பார்த்ததில்லை!


சாரிப்பா லக்கி... கோபத்தில் நிதானம் தவறிச்சு! ஆனால் அந்தப் பணம் இல்லாவிட்டால் என்னோட பண்ணை கோவிந்தா தான்!
என்ன நடந்தது ப்ரெட்?
முகமூடி போட்டுக்கிட்டு ஒரு ஆசாமி துப்பாக்கியோடு வந்தான்! இரும்புப் பெட்டியை திறக்கச் செய்துவிட்டு என்னை மண்டையில் ஒரு போடு போட்டான்! அதிர்ஷ்டவசமாக பெட்டியில் ஜாஸ்தி பணம் இல்லை ஜாக்கோட பணம் மட்டும் தான் இருந்திச்சு!
ஏய்... தாடிக்கார கிழவா! உன்னை...
நிதானம் ஜாக்!
கொள்ளையனைப் பிடிக்க முயற்சிப்போம்! எல்லோரும் வாங்க!
இதற்கிடையே
நாடகம் முடிஞ்ச மாதிரித் தான் லஸ்டி! எல்லாவற்றையும் மூட்டை கட்டு!
ஓ. கே.!
வாங்க - வந்து ஃப்ரீயா ஒரு கிளாஸ் குடிங்க!
நா.. நாங்கள் மூணு பேர் இருக்கோம்பா!
நான் பிள்ளை பிடிக்கும் மீசைக்காரன்களுக்கு ஊற்றிக் கொடுப்பதில்லை!


மறு நாள் கலை -
எங்களது நாடகத்தின் நடுவே திருட்டை நடத்திட்ட கள்வர்களைப் பிடித்து விட்டீர்களா?
நோ! அவன்களது தடத்தைக் கூடப் பார்க்க முடியவில்லை! அது சரி - நீங்க ' அதற்குள்ளாகக் கிளம்பி விட்டீர்களா?
யெஸ்! சுரங்க சொர்க்கம் நகரில் இன்று புரோக்ராம் உள்ளது!
ஆங்... மேடையில் ஒரு மன்மதன் நாடகத்தின் க்ளைமாக்ஸ் என்னன்னு நான் தெரிஞ்சுக்கலாமா? எக்கச்சக்கமா பணம் கொடுத்து டிக்கெட் வாங்கினேன்!
'டுமீல்' - 'டுமீல்'னு சுட்டு வில்லனை க்ளோஸ் பண்ணி விட்டு - யுவதியைக் காப்பாற்றுவேன்! பின்னர் ''தனிமையே என் துணைவன்'' ''தனிமையே என் வாழ்க்கைன்னு'', பாட்டுப் பாடிக்கிட்டே அஸ்தமனமாகும் சூரியனை நோக்கிக் கிளம்பி விடுவேன்!
இதே வசனத்தை இதுக்கு முன்னர் வேறு எங்கேயோ கேட்ட மாதிரியிருக்கே!
ஆளுக்கு ஒரு கப் ஊத்திக்கத் தேவையான பைசா இன்னும் எங்கிட்டே இருக்குபா...! வர்றியா?
அடடே.... பழையபடிக்கு மாறிட்டியா? வா... ஜல்தியா ஒரு கிளாஸ் சாப்பிடுவோம்! நான் அவசரமாய் கிளம்ப வேண்டியுள்ளது!
எங்கேப்பா பயணம்?
ஓ... அதுவா? 'சுரங்க சொர்க்கம்' என்ற ஊருக்கு!


சுரங்க சொர்க்கம்
நிலக்கரி தோண்டுவது பொழைப்புக்கு!
சவக்குழி தோண்டுவது பொழுது போக்குக்கு!
COAL MINER'S RESTAURANT
COAL MINER'S SALOON
COAL MINER'S GENERAL STORE
பிறர் கவனத்தை ஈர்க்காமல் நடமாடுவது இந்த ஊரில் சிரமம் ஜாலி! போய் ஊர் கோடியில் எனக்காகக் காத்திரு!
பேலஸ் ஹோட்டல்
எனக்கு ஒரு ரூம் வேணும்!
ஒரே ஒரு ரூம் தான் பாக்கியிருக்கு! இன்னைக்கு நாடகம் ஒன்று நடக்கப் போவதால் - சுரங்கத் தொழிலாளர்கள் அத்தனை பேரும் ஊருக்குள் வந்திருக்கின்றனர்!
குளிக்க சுடுதண்ணீர் அனுப்பட்டுமா?
நோ! நோ! ஒரு வாளி நிறைய கரித்தூசு வேணும் எனக்கு!
கரித்தூசா...? எ... என்ன சார் சொல்றீங்க...
அன்று மாலை -
!?!


நாடக சபா எந்தப் பக்கமிருக்கு?
பின்பக்கமாகப் போங்க! தெருக்கோடியில் உள்ளது!
ஹா! ஹா! நான் ஒரு அந்நியன் என்பதை எந்தக் கொம்பனாலும் கண்டுபிடிக்க முடியாது! நானும் ஒரு சுரங்கத் தொழிலாளி என்று தான் நினைப்பார்கள்!
!
நாடகம் துவங்கியது...
ஆஆஆ! என் செல்லத் தம்பியின் மீது உன் சுண்டு விரல் கூடப் படக்கூடாது! உதவி! உதவி!
என்னை மணந்து கொள் லிண்டா - இல்லையேல் ஈரேழு ஜென்மத்திற்கும் உன் தம்பியை நீ பார்க்க முடியாது!
டேய்ய்ய்...!
ஐயோ... கரித் துண்டுகள்!
ராஸ்கல்!
பொறுக்கி!
வெள்ளைக் கெள - பாய் வந்துவிட்டார்!
நாசமாய் போக!
அடி தூள்!
அவளை நெருங்காதே நீசனே...!
சுரங்க ஆபீஸை யாரோ கொள்ளையடித்து விட்டார்கள்!



பின்னாடியிருந்து என் மண்டைமேல் ஒரே போடாகப் போட்டு விட்டான்! நான் கண் முழித்துப் பார்த்த போது... சம்பளப் பணம் முழுசும் காணோம்!
சம்பளப் பணமா?
குதிரைகள் எங்கே? க்விக்!
விடாதே - திருடனைப் பிடி!
நண்பரே - துரதிர்ஷ்டவசமான இந்த சம்பவத்தால் எங்களது நாடகத்தைத் தொடர இயலாத நிலையிலிருக்கிறோம். வேண்டுமானால் உங்களுக்காக கதை முடிவைப் பற்றிச் சொல்லட்டுமா?
ஏற்கனவே எனக்கு கதை முழுசையும் சொல்லியிருக்கிறீர்கள் மிஸ்டர் பால்டிமோர்!
நீ... நீங்கள் யார்?
ஓ... சாரி! நாடகம் பார்க்க வந்திருக்கும் நபர் மேக் - அப் போட்டிருப்பது இது தான் முதல் தபாவாக இருக்கும் என்று நினைக்கிறேன்! ஐயாம் லக்கி லூக்!
மிஸ்டர் லூக... அடடா!
அது என்னவோ தெரியலை - எனக்கு இந்த நாடகத்தை முழுசுமாகப் பார்க்கும் பாக்கியம் கிடைக்கவே மாட்டேன்கிறது!
என்ன செய்வது? உங்கள் பகுதியில் கொள்ளையும் - களவும் - அராஜகமும் தலை விரித்தாடுகிறது!
மிஸ்டர் லூக் - நடந்த களவுகளுக்கும் எங்கள் குழுவினருக்கும் தொடர்புண்டு என்று சொல்ல வருகிறீர்களா?
சந்தேகப்பட்டால்... எங்களை சோதனை செய்திடலாம்!
சுரங்கத் தொழிலாளிகள் திரும்பி வரும் வரைக் காத்திருப்போம்!



மறு நாள் காலை-
COAL MINER'S PALACE HOTEL
என்னாச்சு?
ஊஹூம்... சுரங்கத்திற்குள்ளே கூடத் தேடி விட்டோம்! பிரயோஜனமில்லை!
ஆனால் திருட்டு பசங்களின் குதிரை ஒன்றை மட்டும் பிடிக்க முடிந்தது! ஊர் கோடியில் நின்று கொண்டிருந்தது!
ஜாலி ஜம்பர்!
கொஞ்சம் அசந்த சமயம் அமுக்கி விட்டான்கள்!
அந்நியனே... இது உன்னோட குதிரையா?
அவசரமாய் எந்த முடிவுக்கும் வராதீர்கள்!
வேடிக்கையான ஒற்றுமைகள்!
COAL MINER'S PALACE HOTEL
என்னப்பா சொல்றே?
நத்திங் கல்ச் நகரில் பாங்க் கொள்ளையடிக்கப்பட்ட போது மிஸ்டர் லூக் அங்கே தான் இருந்தார்.
நான் சென்ஸ்! எப்படியிருந்தாலும் நேற்று கொள்ளை நடந்த போது தான் நாடகம் பார்த்துக் கொண்டு இருந்தேன்!
இதோ - இவருக்கு அருகே தான் உட்கார்ந்திருந்தேன்!
எனக்கு ஞாபகம் இல்லியே...!
அ... அது வந்து - இன்னைக்கு நீங்கள் கறுப்பாகவும் - நான் வெள்ளையாகவும் இருக்கிறேன்! நேற்றோ - நான் கறுப்பாகவும் - நீங்கள் வெள்ளையாகவும் இருந்தீர்கள்!
ஊர்வலத்திற்குக் கழுதையை ரெடி பண்ணு!
கரும்புள்ளி குத்தி ஊர்வலமா?
நோ! இந்த ஊரில் கரும்புள்ளிக்குப் பதிலாக வெள்ளைப் புள்ளி குத்தி ஊர்வலம் விடுவோம்!



COAL MINER'S PALACE HOTEL
அம்மணி... நீங்கள் விலகிக் கொள்ளுங்கள்!
யுவதியின் கோரிக்கையோடு எனது வேண்டுகோளையும் சேர்த்திடுகிறேன்! இந்தப் பையனை துன்புறுத்தாதீர்கள்!
தூக்கில் போடு!
வாயை மூடுடா பிள்ளை பிடிக்கும் பொறுக்கி!
யா! களவாணிப் பயலுக்கு வக்காலத்து வாங்க இன்னொரு களவாணியா?
வாருங்கள் நண்பர்களே - இது நம் சம்பந்தப்பட்ட விவகாரமல்ல!
அந்த மீசைக்காரனையும் கூட தொங்கவிடலாம்!
KER
ORE
நமது கலைப் பயணம் தொடர்ந்து கொண்டேயிருக்கும்!
பணத்தை எங்கே பதுக்கியிருக்கேன்னு சொன்னால் உயிர் பிழைப்பாய்!
என்கிட்டே இல்லை!
இப்போ என்ன பண்ணலாம்?
தூக்கில் போட வேண்டியது தான்!
ஹ்ம்ம்ம்... ஆட்டம் முடியப் போகுது பையா!
அவ்வளவு சுலபத்தில் முடியாது பிரதர்!


என்னப்பா தாமதம்? பயல் கழுத்தில் சுருக்கை மாட்டிவிட்டு வேலையை ஆரம்பி!
கெட்டியா பிடிச்சுக்குங்க தலைவா...! கம்பி நீட்டிடுவோம்!
டுமீல் டுமீல் டுமீல்
குதிரைகளைக் கிளப்புங்க...! பயலைப் பிடிக்கனும்!
நீ, ஒரு மாங்காய் மடையன்னு எனக்குத் தெரியும் பிராங்க் - ஆனால் இவ்வளவு பெரிய மாங்காய்னு இன்னைக்குத் தான் தெரிஞ்சுக்கிட்டேன்!


ஊஹூம்...
பிரயோஜனமில்லை!
அவனோட குதிரை
சிட்டாப் பறந்து விட்டது!
ம்ம்ம்... சம்பளப் பணம்
அம்போ! அடுத்து என்ன
செய்வது?
போய் நாடகத்தின் மீதிப்
பாதியை போடச் சொல்லி
பார்த்தால் என்ன?
நாடகம் பார்க்கணும்னா இண்டியன்
பிளாட் நகருக்குப் போகணும்!
பால்டிமோர் குழு அங்கே தான்
போய்க்கிட்டிருக்கு!
இதற்கிடையே -
தலைவரே... அந்தத்
தாழ்வான கிளைகள் வந்த
போது
குனிஞ்சுக்கிட்டீங்களா?
ஊ ஊப்ஸ்!
டேய்... தூங்கப் போறேன்னு
உங்கிட்டே சொன்னது மறந்திட்டியா?
அந்தக் கூத்துக்காரன்களை மீண்டும்
சந்திக்க வேண்டியுள்ளது! எங்கே
போயிருப்பான்கள்?


பிறகு
நாடகமா? இந்தப் பக்கம் அந்த மாதிரி ஏதும் கிடையாதுப்பா...!
நான் முதல்லேயே யூகிச்சிருக்கணும்!
அப்புறம் -
நாடகம் ஒண்ணு தான் குறைச்சல் இந்த ஊருக்கு! அங்கே பார் நடக்கிற கூத்தை!
அதற்கும் அப்புறம் -
நாடகமா...? யாருக்கு வேணும் அந்தக் கண்றாவியெல்லாம்? பொழுது போகலைன்னா இங்கே வாப்பா கண்ணா!
பேமானி!
மாயமாய் மறைஞ்சிட்டாங்களே! அவன்களைத் தேடிப் பிடித்து பணத்தை மீட்காவிட்டால் ஜாக்கின் பண்ணை க்ளோஸ்!


போர் நாடி நான் வரவில்லை சகோதரர்களே! அமைதி விரும்புகிறவன் நான்!
நாங்களும் கூட அப்படித் தான்!
ஆனால் யுத்த கோலத்தில் இருக்கிறீர்களே? முகத்தில் கூட யுத்த வண்ணம்!
நோ! நோ! இது சும்மா... வேடிக்கைக்கு! இன்னைக்கு இரவு ஊருக்குள் நாடகம் பார்க்கப் போறோம்!
நாடகமா?
யா! வெள்ளையர்கள் போடும் நாடகம் ஒரே வேடிக்கை தான்!
!
இதுக்கு முன்னால் ஹாம்லெட்டோ - ஆம்லெட்டோ - ஒரு நாடகம் பார்த்தோம்!
அந்த நாடகக் குழுவை சிறை பிடித்தோம்! அதில் நடிச்ச குட்டி இப்போ என் ஏழாவது பெண்ஜாதி!
அது சரி! இன்னைக்கு நாடகம் எந்த ஊரில்?
இண்டியன் பிளாட் நகரில்! ரொம்பத் தூரமில்லை - நேராகப் போகணும்!
ரொம்ப தாங்க்ஸ் சீஃப்! வர்றேன்!
நீ நாடகம் பார்க்க வருவது இது தான் முதல் தடவை! இல்லையடா கண்ணா?
யா!


இண்டியன் பிளாட்ஸ்
தறுதலைகள் உஷார்! தலை தவறி விடும்!
பாலைவகள்
செவ்விந்திய விவகார அமைச்சகம்
என்ன நடக்குது ஷெரீப்?
இந்தப் பகுதியில் வசிக்கும் செவ்விந்தியப் பழங்குடியினருக்கான மானியப் பணம்! பத்திரப்படுத்துவதற்காக கொண்டு வந்திருக்கிறோம்!
பணத்தில் கை வைக்கலாம்னு கனவு காணாதேப்பா தம்பி! தொலைச்சிப்புடுவோம்!
விடேகர் பால்டிமோர் வழங்கும் மேடையில் ஒரு மன்மதன்!
மிஸ்டர் லூக்... நீங்கள் தப்பி விட்டீர்களா? ஒரு கிளாஸ் ஜூஸ் சாப்பிடுகிறீர்களா?
நோ தேங்க்ஸ் பால்டிமோர்!
கும்!



உனக்கென்ன பைத்தியம் பிடித்து விட்டதா?
அப்பனே... பெரியதொரு நாடக விமர்சகராகும் திறமை உன்னிடம் தெரிகிறது!
உன் கைங்கர்யத்தால் சுரங்க சொர்க்கம் நகரில் என்னை தூக்கிலிடப் பார்த்தார்கள்! ஒன்றை மட்டும் நினைவில் வைத்துக் கொள்! நான் இந்த ஊரிலேயே தான் இருக்கப் போகிறேன்
நாடகம் நடக்கும் போது இங்கேயும் களவு நிகழ்ந்தால் - மகனே... தொலைந்தாய் நீ!
TIPI HOTEL
இரவு 10 மணிக்கு மேல் போர் முரசுகள் ஒலிக்க அனுமதி கிடையாது
டக்! டக்!
யெஸ்?
மிஸ்டர் லூக்... முதலாளி உங்களோட கொஞ்சம் பேசணுமாம்! அவரோட ரூமிலே இருக்கார்!
இதோ - இங்கே தான்!
7
அருமையான காரியம் செய்த ஹீரோ வந்து விட்டாரா? பலே!
?
இந்த முகத்தோடு நாடகத்தில் கதாநாயகனாக நான் நடிப்பது சாத்தியமாப்பா?


உன்னோட முட்டாள்தனமான சந்தேகங்களின் பலனாக என்னால் இன்று மேடையேற முடியாது போய் விட்டது!
ஆனால்... நாடகம் நடந்தாகணுமே விடேகர்! டிக்கெட் முழுசும் விற்றுப் போச்சு! நாடகம் போடாவிட்டால் ரகளையாகி விடும்!
உன்னோட சந்தேகத்தால் - கிட்டத்தட்ட தூக்கில் தொங்கும் நிலைக்கு நான் போக நேரிட்டதே - அது மறந்து விட்டதா?
ஆல் ரைட்... ஆல் ரைட்... அது என் தப்பு தான்! ஆனால் இன்றிரவு என்ன செய்வது?
எனக்கொரு ஐடியா!
மிஸ்டர் லூக்கே அந்தப் பாத்திரத்தில் நடித்தாலென்ன? அடிக்கடி நாடகத்தைப் பார்த்துள்ளதால் அவருக்கும் வசனம் மனப்பாடமாகத் தெரிந்திருக்கும்!
யார் - நானா?
அட - நல்ல ஐடியா! அந்தப் பாத்திரமும் அவ்வளவு கஷ்டமானதல்ல!
கொஞ்சம் விட்டால் பேசிக் கொண்டே போவீர்களே!
நா... நான் நடிச்சதே கிடையாது! ஆளை விடுங்க!
எனக்காக நடிக்க சம்மதிக்க மாட்டீர்களா? ப்ளீஸ்... ப்ளீஸ்...
ஒரு தடவை மேடையேறி விட்டால் - அப்புறம் இந்த மோகம் உன்னையும் தொற்றிக் கொள்ளும்!
அது மட்டுமல்ல - நாடகத்தின் போது எங்கள் குழுவினர் அத்தனை பேரையும் கண்காணிப்பிலேயே வைத்திருக்க உனக்கு இது அருமையான சந்தர்ப்பம்!
ஆக - அன்று மாலை -
! ? ! !
ப்ளீச்சிங் பவுடருக்குள் மனுஷன் விழுந்திருக்கணும்!
கெக்கெ பிக்கேன்னு பல்லைக் காட்டிக் கொண்டிருக்காமல் கொட்டகையின் ஜன்னல் ஓரமாகப் போய் நில்லு! உன் உதவி தேவைப்படலாம்!



இது தான் நாடகமாப்பா?
ம்ம்ம்... திரையை தூக்கின பிறகு தான் நாடகம் ஆரம்பிக்கும்!
திரை மேலே போகுமா?
வ...வந்து உங்க தொப்பியை கொஞ்சம் கழற்றலாமா?
என்னப்பா மேடைப் பயமா?
கொஞ்சூண்டு! என்கிட்டே தான் இந்த கைராசியான துப்பாக்கி இருக்கே!
எங்கள் பெற்றோர்கள் அகால மரணமடைந்தது முதல் நானும் எனது தம்பிப்பாப்பாவும் வறுமையில் வாடுகிறோம்! அந்த ஜோன்ஸ் வேறு என்னை சுற்றிச் சுற்றி வந்து தொந்தரவு கொடுக்கிறான்!
இப்போ நீ போகணும்!
எங்களைக் காப்பாற்ற யாருமே இல்லையா? திரும்பச் சொல்லுகிறேன் - யாருமே இல்லையா?
மேடைக்குப் போப்பா! கைதட்டுகளைத் துவக்க லஸ்டி தயாரராக இருக்கிறான்!
ஆ... ஆ.. வ.. வந்து... விண்டா... சீ... சீ.. அண்டா... சீ..சீ... லிண்டா... நீ... நான்
புரிகிறது!
எங்களைக் காப்பாற்ற வந்த வெள்ளைக் கௌ-பாய் நான் தான் என்று சொல்லப் போகிறீர்கள்! அப்படித் தானே?
சபாஷ்! பலே! பலே!
சே... சுலபத்திலே உன்னை சந்தோஷப்படுத்திடலாம் போலிருக்கே!


சீன் 2.
ஐயகோ! என் செல்லத் தம்பி மீது உன் சுண்டு விரல் கூடப் படக்கூடாது! யாராவது காப்பாற்றுங்கள்! உதவி!
என்னை மணந்து கொள் லிண்டா? இல்லையேல் ஈரேழு ஜென்மத்திற்கும் உன் தம்பியை நீ பார்க்க முடியாது!
இப்போ நான் என்ட்ரி ஆகணும்!
ஏய் மீசைகார நாயே... அந்தப் புள்ளை மீது கை வச்சே - தொலைச்சுப்புடுவேன்!
அட... வெள்ளைக் கெள - பாய்!
கிழிஞ்சது போ! உன்னைக் காப்பாற்றப் போகும் கம்மனாட்டி இவன் தானா?
நாங்க ஒத்தாசைக்கு வர்றோம்! அந்த மீசைக்காரனை மண்டையில் ஒரே போடு!
அமைதி! இந்த ஆளை அவன் வேலையை தொடர விடுங்கள்!
டுமீல்!
நோ - நோ - அப்படிப் பேசினால் குழப்பம் உண்டாகும்! நீங்கள் என்னைக் காப்பாற்ற...
செவ்விந்திய ஆபீஸில் கொள்ளை போய் விட்டது!
அதோ - அங்கே மேடை மீது நிற்கும் அந்த நோஞ்சான் ஆசாமி காலையிலேயே ஒரு மாதிரி சுற்றிக்கிட்டிருந்தான்!
அவனை எனக்குத் தெரியும்! சுரங்க சொர்க்கம் நகரில் இருந்தான்!
சுரங்க ஆபீஸ் பணத்தைக் கொள்ளையடித்ததற்காக தூக்கில் போட வேண்டியது இவனைத் தான்!


ஒரு கயிறு! ஒரு கயிறை எடுங்க!
பிடியுங்கள்!
பேசாமல் உட்காருங்கள்! இது பொம்மைத் துப்பாக்கி இல்லை!
ஆ... வந்தாச்சா? என்னடா இத்தனை நாழியா ஆளைக் காணோமேன்னு நெனைச்சேன்!
இதுக்கு முன்னாடி ஒரு தடவை அண்ணாத்தே தப்பான ஜன்னல் வழியா குதிச்சார்! கீழே பார்த்தா தண்ணீர் தொட்டி! ஹி! ஹி!
அந்த ராஸ்கலைப் பிடியுங்க! க்விக்!
மரியாதையாக இப்பவே கிளம்பிடுவோம்! இல்லைன்னா நம்பளையும் சந்தேகிக்க ஆரம்பித்து விடுவானுங்க!
நாடகம் சூப்பரா இருக்குப்பா!


மறுநாள் காலை -
மொள்ளமாப் போகலாம் இனி! அவன்களைக் காணோம்!
எனக்கு ஒரு ஆசை பாஸ்! ஒரு சேஞ்சுக்காகவாது - ஊருக்குள் புயல் மாதிரி நுழைஞ்சுட்டு, வெளியேறும் போது மெள்ளப் போகணும்! சாத்தியப்படுமா பாஸ்?
ஹ்ம்ம்... நான் தேடியது இது தான்!
ஜெனரல் ஸ்டோர்
ஒரு மஞ்சள் சட்டை, சிகப்பு ஸ்கார்ப், ப்ளூ ஜீன்ஸ், ப்ரவுண் கலர் ஷூ, கறுப்பு ஒவர் - கோட் கொடுங்க!
உங்கள் தேவைகள் என்னவென்பதை துல்லியமாகச் சொல்லி விட்டீர்களே!
இனி அந்த திருட்டு ராஸ்கல்களைப் பிடிக்கணும்!
இந்தா - இதை முகர்ந்து பார்!
ம்ம்ம்ம்...
ம்ம்ம்ம்ம்...
ம்ம்ம்...
இரவு கவிழ்ந்த 'போது'
தூள் கிளப்பிட்டோடா கண்ணா!
ஹ்ம்ம்ம்... என்னல்லாம் வேலை எனக்கு!


TROUPE
WHITTAKE
BALTIMORE
!
சந்!
உடுப்பை திருப்பிக் கொடுக்க வந்தேன்!
உன்னோட பெரிய ரோதனையா போச்சுபா! உன் பாட்டுக்கு ஏதாவது அடாவடி செய்துட்டு எங்கள் நாடகங்களை நடக்க விடாமல் பண்ணுறே!
எனக்குப் பதிலா நீ ஹீரோவா நடிச்சதினாலே நீயும் எங்கள் குழுவில் ஒருத்தன்னு இண்டியன் பிளாட்ஸ் மக்கள் நெனைக்கிறாங்க...! வீணாக எங்களையும் சந்தேகப்படுறாங்க...!
உங்கள் மூட்டை முடிச்சுகளை சோதனை போடப் போகிறேன்! பணம் இங்கே தான் இருக்கணும்!
ம்ம்ம்... ஏதாச்சும் கிடைச்சதாப்பா?
போலி தாடிகள்... மூக்குகள்... பொம்மைத் துப்பாக்கிகள்...
நாடக உலகில் எல்லாமே போலி தான் பிரதர்!
எங்களோடு டின்னர் சாப்பிடலாமே?



ஹ்ம்ம்ம்... மிஸ்டர் லக்கி லூக் - நாம் பிரியும் வேளை வந்து விட்டதென்று நினைக்கிறேன்!
நோ.. நோ.. நோ! மிஸ்டர் டார்குலா சொன்னது நிஜமாகி விட்டது - எனக்கும் நடிக்கும் மோகம் தொற்றிக் கொண்டு விட்டது!
ஓஹோ... இன்னமும் சந்தேகம் தீரலையாக்கும்? சரி - நீ எங்கள் குழுவோடு வருவதாகயிருந்தால் கூட உனக்கு என்னால் சம்பளம் கொடுக்க இயலாது!
எனக்குப் பணம் பெரிசில்லை... கலைச்சேவை தான் முக்கியம்! ம்ம்ம்... இன்றிரவே கம்பி நீட்டிடலாம் என்ற எண்ணம் இருந்தால் மாற்றிக் கொள்ளுங்கள்!
கம்பி நீட்டவா? எதற்காம்? நாளை எங்களுக்கு டம்பிள்வீட் நகரில் புரோக்ராம் உள்ளது!
ஐயகோ... ஐயகோ... இந்த சந்தேகக் கணைகளுக்கு ஒரு முற்றுப்புள்ளியே கிடையாதா?
நானும் ஒரு பரிதாபத்திற்குரிய ஜீவன் என்று உங்களுக்குப் புரியலையா?
''மங்கையின் மரணம்'' என்ற என்னோட இன்னொரு நாடகத்தில் வரும் வசனம் இது!
!
ஆஆ... நண்பரே... வெற்றியோடு இத்தனை பழிச்சொற்களையும் சேர்த்தே சுமந்திட வேண்டுமா?
இது ''ஜெனரல் லீ'' என்ற நாடகத்திலிருந்து!
பதட்டம் வேண்டாம் சிறு மலரே! நரக வேதனைகள் நாளையோடு தீர்ந்துவிடும்.
இது 'யுலைஸஸ்' என்ற வெற்றி நாடகத்திலிருந்து!
போதும்! போதும்! என்னைத் தூங்க விடுங்கள்!
இந்த வசனம் ''லக்கி லூக்கின் குறட்டைகள்'' என்ற நாடகத்திலிருந்து!


டம்பிள் வீட்
நகரம்
திருடர்கள் கவனத்திற்கு!
இங்கே களவு நடத்தி வெற்றி காண்பது முடியாது! பந்தயம் வைப்போமா?
நாடகம் போடத் தேர்ந்தெடுக்கும் ஊர்கள் எல்லாமே ரொம்ப ''பசையாக'' இருப்பதும் தற்செயலாகத் தானா விடேகர்?
மாவட்ட வங்கி
TROUPE
TTAKER
IMORE
லக்கி லூக் - உன் லொள்ளு தாங்கலையா!
நாடகம் நடக்கவிருக்கும் இடம் இதுதான்!
வாங்கோ... வாங்கோ...!
இனியும் பந்தயங்கள் ஏறாக முடியாது!
பகடையை உருட்டு!
இந்த ஊரின் வருமானமே சூதாட்டத்தை நம்பித் தான் உள்ளது! குடிக்க என்ன வேணும் உங்களுக்கு?
ஜிஞ்சர் பீர்!
எனக்கும்!
எனக்கும் தான்!
எங்களுக்கு ஆரஞ்சு ஜூஸ்!
ஹேய் சாம்... ஜல்தியா எடுத்திட்டு வா!
டுமீல்!
என்னது?
சூதாட்ட மேஜையில் ஏதாவது வாக்குவாதமாக இருக்கும்!
வாக்குவாதம் முடிஞ்சிட்டுது பாஸ்!


நீங்க தான் ஜிஞ்சர் பீர் பார்ட்டியா?
கிளாஸை வைத்து விட்டு ஓடிப் போ! நாங்கள் கொஞ்சம் பேச வேண்டியுள்ளது!
ஐயா சொல்றபடியே செய்யுப்பா! அவர் தான் முதலாளி!
உன்னோட சேட்டை என்னவென்பதைக் கண்டு பிடித்து விட்டேன் விடேகர்! "மேடையில் ஒரு மன்மதன்" நாடகம் நடந்து கொண்டிருக்கும் போது களவு செய்து வருவது நீ தான்!
வில்லன் டார்குலா மேடைக்கு வரும் போது ஏற்படும் களேபரத்தை நீ பயன்படுத்திக் கொள்கிறாய்!
கைதட்டுகளையும், கூச்சல்களையும் துவக்கி வைத்து உனக்கு தேவையான அவகாசத்தைப் பெற்றுத் தருகிறான் லஸ்டி!
லக்கி... கூடிய சீக்கிரத்தில் நீயே ஒரு கதாசிரியராகி... நாடக திரைக்கதை எழுத வாய்ப்புள்ளது! உன் கற்பனை அதீதம்!
ஊரில் உள்ள எல்லோரும் நாடகத்தைப் பார்க்க வந்து விடுவதால் பணப்பெட்டிகளை பாதுகாத்திட போதுமான ஆட்கள் இருப்பதில்லை! உன் வேலையும் சுலபமாகி விடுகிறது!
எல்லை மீறிப் பேசுறேப்பா லக்கி... எதைப்பாவது நிரூபிக்க முடியுமா உன்னால்?
சூதாட்டம் இத்தோடு முடியுது! நாடகத்திற்காக இடத்தைத் தயார் பண்ணியாகணும்! ம்ம்ம்...
நிரூபிக்கிறேன்! இன்று இரவு நாடகம் நடக்கும் போது ஸ்டேஜிற்குப் பின்னாலிருந்து உங்கள் அத்தனை பேரையும் கண்காணிக்கப் போகிறேன்!
இன்று மட்டும் நாடகத்தின் போது மாவட்ட வங்கியில் கொள்ளை நடக்காமல் இருந்தால் - என் யூகங்கள் சரியென்றாகி விடும்!
சுத்த பேத்தல்!



அன்று மாலை -
திரை தூக்கும் வரைக்கும் ரஷ்யன் ரூலெ ஒரு ஆட்டம் ஆடுவோமா?
மேடையின் ஓரத்திலேயே தான் இருப்பேன்! உன் மீது தான் என் கவனமெல்லாம்! மறந்து விடாதே!
கூட்டத்தோடு போய் இருக்கப் போவதானால் நான் பார்க்கக் கூடிய இடத்தில் உட்கார் லஸ்டி!
ஐயகோ! எங்கள் பெற்றோர்கள் அகால மரணமடைந்ததிலிருந்து......etc... etc... .....
நோ லிண்டா! நீயும் உன் தம்பியும் அநாதைகள் அல்ல! உங்களைப் பாதுகாக்க வெள்ளைக் கௌ-பாய் நானிருக்கிறேன்!
சீன் 2
என்னை மணந்து கொள் லிண்டா.....
ஆஆ... என் செல்லத் தம்பி மீது உன் சுட்டு விரல் கூட.....
டேய் சோமாறி!
அவனை அமுக்கு!
மீசைக்கார ராஸ்கல்!
பேமாளி!
ஒரு வழியாக நாடகத்தை இன்னைக்கு முழுசாகப் பார்க்கும் பாக்கியம் எனக்குக் கிடைக்கப் போகுதுன்னு நெனைக்கிறேன் விடேகர்!
மாவட்ட வங்கியில் கொள்ளை போய் விட்டது!



பாங்க்கை கொள்ளையடித்து விட்டான்கள்!
கமான்!
அப்புறம் தம்பி? இனியாவது கொள்ளையர்கள் நாங்களல்ல என்று நம்புவாயா?
???
பாங்க் பூட்டியிருக்குது தெரியலையா? ஓடிப் போயிடு - இல்லைன்னா மண்டையைப் பொழந்திடுவேன்!
நாங்க தான் ஜார்ஜ்! கதவைத் திற!
என்ன வேணும்?
வ... வந்து களவு நடக்கலையா?
களவா? என்ன உளர்றே?
அடச்சே! ஏமாத்திட்டானுக!
சலூனுக்கு திரும்பிப் போகலாம்! க்விக்!
ஆமா... ஆமா... போய் நாடகத்தின் க்ளைமாக்ஸைப் பார்க்கலாம்!
அந்தப் பெண்பிள்ளை மீது மீசைக்காரன் கை வைத்தால் தொலைச்சுப்புடுவேன்!
யா! நாம் வெளியேறி விட்ட தைரியத்தில் பயல் ஏதாவது செய்திருக்கலாம்!


ஹேய்... நடிகர்களைக் காணோம்?
பாஸ்! கல்லாப் பெட்டியை எவனோ காலி பண்ணிட்டான்! சூதாட்டப் பணமெல்லாம் போச்சு!
அந்தக் களவாணிப் பயல்களை விரட்டிப் போவோம்!
கொஞ்சம் பொறு! இவன் தான் கும்பலின் தலைவன்னு அந்த நாடக ஹீரோ சொன்னான்!
நானா?
நான் அவர்களைக் கண்காணிக்க வந்தேன்!
துப்பாக்கியைக் கீழே போடு அந்நியனே!
ம்ம்ம்... எங்கே ஆளைக் காணோம்?
அச்சச்சோ... ஐயா முன்வாசல் வழியாப் போறாரே...! மோசமான அறிகுறி அது!


ரா முழுக்க உள்ளே கிடந்தீன்னா புத்தி வரும்! உன்னோட கூட்டாளிங்க எங்கே இருக்காங்கன்னு காலையிலே சொல்லாட்டா - மவனே... தோலை உறிச்சிப்புடுவோம்.
இங்கே நின்னு உளறிக் கொண்டிருக்கும் நேரத்திற்கு அவன்களைத் தேடிப் போனீர்களானால் பிரயோஜனமாகயிருக்கும்!
அவனை கவனமா பாத்துக்கோடா தாடி!
ஓ. கே!
இந்த ஊரிலே எல்லாருக்கும் சூதாட்டப் பைத்தியம் பிடிச்சிருக்கு!
யா! ஐயாவோட ஸ்பெஷாலிட்டி ரஷ்யன் ரூலே! கடைசியா என்னோட விளையாடின தோஸ்த் மண்டையைப் போட்டுட்டான்!
எனக்கு ரஷ்யன் ரூலேன்னா உசிரு!
மெய்யாலுமா?
உன்னை மாதிரித் தான் நானும்... சரியான பார்ட்னர் கிடைக்காமல் அவஸ்தைப்படுறேன்!
அருமையான விளையாட்டு இது! யாரும் இதில் தில்லுமுல்லு பண்ண முடியாது!
ஹ்ம்ம்ம்... என்னை நாளைக்கு தூக்கில் போடப் போறாங்க...! கடைசியா ஒரு கேம் ஆடினால் சூப்பரா இருக்கும்!
அடடா... சென்டிமென்டை 'டச்' பண்ணிட்டியே! சரி... ஒரு தபா ஆடலாம்!
க்ளிக்!
இது உன்னோட தடவை! யார் கண்டது நாளை தூக்கில் போடுவதற்கு முன்னமே கதையை முடிச்சுக்க வாய்ப்பு கிடைக்கலாம்!
சரியாச் சொன்னே!
தாடிப் பையா... மரியாதையா கதவைத் திற!



கிழிஞ்சது போ! யாருமே தில்லுமுல்லு பண்ண முடியாத ஆட்டம் இதுன்னு நெனைச்சது தப்பா போச்சு!
பாஸ்... இந்தப் பிரச்சனையை பேசித் தீர்க்கணும்! நான் ஜன்னலுக்கு கீழே காத்திருந்தால் நீங்க முன் கதவு வழியா வர்றீங்க...! வாசலில் நின்னா... ஜன்னல் வழியா குதிக்கிறீங்க! ஏதாவது ஒரு முடிவுக்கு வாங்க!
கைதி தப்பிச்சிட்டான்! திருட்டுப் பய!
சிட்டாய் பற ஜாலி!
ஓ.கே. தலைவா!
மறு நாள் காலை -
அந்த நாடகக்காரன்களைத் தேடிப் போய் பிரயோஜனமில்லை! எங்காவது போய் பதுங்கியிருப்பான்கள்!
போய் ஜாக்கிடம் கெட்ட சேதியை சொல்ல வேண்டியது தான்!
அதைத் தொடர்ந்து -
திருட்டுப் பையா... லக்கி!
டுமீல்!
என்ன - என்னோட துட்டை கண்டுபிடிச்சியா இல்லையாடா ராஸ்கல்?
இல்லைப்பா ஜாக்! சொதப்பிட்டேன்!



ஒழியுது போ! மிஞ்சி மிஞ்சிப் போனா என் பண்ணையை வித்துட்டு திரும்பவும் கௌ-பாயா வேலைக்குப் போகனும்! வா... போய் ஒரு கிளாஸ் ஊற்றுவோம்!
எனக்கு குடிக்கிற மூடு இல்லைப்பா ஜாக்!
அழகி டும் - டும் நடனக் குழு!
இது உன் 'மூடை' மாற்றிவிடும்! வா! புதுசா வந்திருக்கும் ஷோ இது!
பணம் வேணாம் எனக்கு! பதவி வேணாம் எனக்கு! நீ பக்கத்தில் இருந்தால் - மற்றதெல்லாம் எதுக்கு?
அட... அட... நம்ம நாடக ரசிகரும் வந்திருக்காரா?
கண்ணா! இன்னைக்கு நீ பார்க்கப் போறது தான் நிஜமான கலை!
மேடையேறுங்க பொண்ணுங்களா!
ஓ...லா...லா...லா...லாாா...!
ஜில்லி! ஜில்லி!


மன்மதா... மெள்ளப் போ!
நீ நெனைக்கிற மாதிரி ஆசாமியல்ல அவன்!
லக்கி... இவ்வளவு சீக்கிரமா என்னை எப்படிக் கண்டுபிடிச்சீங்கன்னு தெரியாது...
ஆனா இதுவும் ஒரு விதத்திலே நல்லதுக்குத் தான்! நடந்தது எல்லாத்தையும் சொல்லிடறேன் - அப்புறம் நடக்க வேண்டியது நடக்கட்டும்!
அந்த வாழ்க்கை எனக்கு அலுத்துப் போச்சு! டம்பிள் வீட் நகரத்திலிருந்து நாடக கோஷ்டி கிளம்பும் போது நான் டிமிக்கி கொடுத்து விட்டு இங்கே வந்து சேர்ந்துட்டேன்!
உங்கள் யூகம் சரி தான்! வில்லன் டார்குலாவை எல்லோரும் தூற்றிக் கொண்டிருக்கும் போது விடேகர் தான் கொள்ளையடிப்பார்!
இப்போதைக்கு இந்த வேலையில் நான் நிம்மதியா இருக்கேன்!
அவனுக எங்கே பதுங்கியிருக்காங்கன்னு சொல்லு!



ஒரு மேப் வரைஞ்சு காட்டறேன்! இங்கிருந்து ரொம்பப் பக்கம் தான்!
மரங்களடர்ந்த பகுதி! ஜாக்கிரதை! அவன்கள் ஆபத்தானவங்க!
எ... என்னை என்ன செய்யப் போகிறீர்கள்?
என்னமும் செய்யப் போவதில்லை! போய் ''கலைச் சேவையைத்'' தொடரு ஜில்லி!
?
?
லா... லா... லா...
அந்த குடிசையில் போய் எட்டிப் பார்க்கப் போகிறேன் ஜாலி! நீ எங்காவது ஒழிஞ்சுக்கோ!


ஹாண்ட்ஸ் அப், மிஸ்டர் வில்லன்!
நாசமாய் போக!
பணமெல்லாம் எங்கே?
முடிந்தால் கண்டுபிடிச்சுக்கோ பிரதர்!
அட... அட... தம்பிப் பாப்பா நல்லா 'கொழு' 'கொழு'ன்னு இருக்கிறார் போலத் தெரியுது!
ஐயகோ! என் செல்லத் தம்பி மீது உன் சுண்டு விரல் கூடப் படக்கூடாது!
வழி விடுமய்யா!
பர்ர்ட்!
பொம்மையை விடுடா நீசனே!
டுமீல்
நாடக முடிவை மாற்றிவிட்டேன் கௌபாய்! இந்தத் தடவை சுபமாக முடியப் போகுது!
இன்னமும் முடியலைப்பா!



லஸ்டி!
ஹி! ஹி! ஹ!
அசையாதே லக்கி லூக்! நகர்ந்தால் சுட்டுப்புடுவேன்!
உன்னோட குதிரையை பிடித்து வைத்திருக்கிறேன்! உன் துப்பாக்கியை கீழே...
ணங்!
லஸ்டி?
ஹா! ஹா! க்ளைமாக்ஸில் எத்தனை திருப்பம்டா சாமி?
ஆக... டம்பிள்வீட் நக்ரில் கொள்ளை நடந்து விட்டது என்று புரளியைக் கிளப்பியது லஸ்டி தானாக்கும்?
யா! இனி மறைப்பதில் அர்த்தமில்லை! லஸ்டி தான் எங்கள் பாஸ்!
கலைச் சேலை செய்வதில் உள்ள ''லாபங்களைப்'' பற்றி லஸ்டி தான் விளக்கிச் சொன்னான்!
எல்லாம் ஒழுங்காகத் தான் போய்க் கொண்டிருந்தது - உன்னை சந்திக்கும் வரை!
நல்ல வேலையடா பையா!
நாடகத்தை வேணும்னா வெள்ளைக் கௌபாய் சுபமா முடித்திருக்கலாம் - நிஜத்தில் வெள்ளைக் குதிரை வந்தால் தான் சுபமா முடியுது! ஹி! ஹி! ஹி!


சட்டி சுட்டதடா... கை விட்டதடா...
புத்தி கெட்டதடா...!
WHITTAKER BALTIMORE
வாயை மூடுங்கடா கம்மனாட்டிகளா!
நத்திங் கல்ச் நகரில் -
எங்கேடா போய்டே லக்கி கண்ணா?
சொத்!
பொம்மையிலே உள்ள பணம் மொத்தமும் நமக்குத் தான்னு நெனைச்சுடாதேடா தடியா! மற்றவங்க பணமும் இருக்குது!
போய் கொஞ்சம் நீர்ப்பாசனம் பண்ணலாம் லக்கி!
நோ - ஜாக்!
நாடகக் குழுவினரை நீதிபதி முன்னால் கொண்டு போய் நிறுத்தனும்!


சில வாரங்கள் கழித்து - மத்திய சிறைச்சாலையில்
ஐயகோ... என் செல்லத் தம்பி மீது உன் சுண்டு விரல் கூடப் படக்கூடாது... உதவி!
என்னை மணந்து கொள் லிண்டா! இல்லையேல் ஈரேழு ஜென்மத்திற்கும் உன் தம்பியை பார்க்க முடியாது!
வெள்ளைக் கௌபாய்!
அடச் சே!
கையை எடுடா நீசனே...!
?
டேய்ய்
அந்த வெள்ளைச் சோமாறியை கொல்லு!
டார்குலாவை தொடாதே!
கதை சொல்றியா எனக்கு?
கொர்ர்...
தனிமையே என் துணைவன்... தனிமையே என் வாழ்க்கை!
(முற்றும்)

முன் கதை :

இரண்டாம் உலக யுத்தத்தின் கடைசிக் கட்டம் அது! ஜப்பானிய ஆதிக்கத்தை 'சட்'டென்று மண்டியிட வைக்க நினைத்த அமெரிக்கா ஹிரோஷிமா நகர் மீது அணுகுண்டு வீசியது! அந்தப் பிரளயத்தைத் தொடர்ந்து...




இறுதியாக என் அண்ணன் திரும்பிவந்தான். உடனே நாங்கள் அருகில் இருந்த இபா கிராமத்தில் நன்கு தெரிந்த ஒருவருடைய வீட்டில் போய்த் தங்கினோம். ஒவ்வொரு நாளும் இறந்தவர்களின் சடலங்களைத் தூக்கிக்கொண்டு வந்தனர்...
ஹேய், மீண்டும் கருகிய சடலங்கள் வருகிறது! கமான் நாம் போய் பார்ப்போம்!
சடலங்களை எரியூட்டுவதற்குக் கூட நான் உதவி செய்தேன்.
மீன்கள் ரோஸ்ட் ஆவது போல மனித உடல்களும் ஆவதைக் கண்டேன்.
தீ ஜுவாலை சடலங்களைப் பற்றி எரியும்போது அவை அனில் குதிப்பது போல பின்னோக்கி வளைந்த நிலையில் எழுந்தன.
இகிஸ்! இங்கே பார்! இது குதிக்கிறது!
ஹிரோஷிமா நகரில் எங்கு பார்த்தாலும் சடலங்களை எரிப்பதால் ஏற்படும் புகை எழுந்த வண்ணம் இருந்தது
ஹிரோஷிமா நகரின் புறநகர்ப் பகுதியில் ஒரு மனிதன் சுவர்களுக்கிடையே சிக்கி நசுங்கிக் கிடப்பதைக் கூட நான் பார்த்தேன்.
யசுடோ, கெய்ஜி - நீங்கள் இருவரும் எரிந்து போன நம் வீட்டிற்குப் போய் உங்களுடைய தந்தை, சகோதரன் மற்றும் சகோதரியின் எலும்புத்துண்டுகளை எடுத்து வாருங்கள். அவைகள் என் கண்ணில் வரும்வரை என்னால் அமைதியுடன் இருக்க முடியாது!
ஓ.கே மம்மி. நாங்கள் நாளைக் காலை போகிறோம்!


வாவ் - யசுடோ அங்கே பார்! எல்லாமே போய்விட்டது!
யா... ஹிரோஷிமா நகரமே எரிந்து தரைமட்டமாகி விட்டது!
நெருப்பின்றி புகைந்து கொண்டிருந்த இடங்களில் அங்குமிங்குமாக கருகிய சடலங்கள் கிடந்தன.
ஒவ்வொரு தண்ணீர் தொட்டிகளிலும் சடலங்கள் கிடந்தன. வெப்பம் தாங்காது உயிர் தப்ப நினைத்தவர்கள் நீர் தொட்டிகளில் குதித்து இறந்ததால் அவர்களுடைய சடலங்கள் உப்பிக்கிடந்தன.
用防
水火


இதே காலகட்டத்தில் குண்டு விழுந்த ஹிரோஷிமா நகருக்கு வந்த மக்கள் தங்களுடைய தலை முடியை இழந்தனர். கடுமையான வயிற்றுப் போக்கால் சாவையும் தழுவினர்!
நகரில் இருந்த கதிர் வீச்சால் அவர்கள் பாதிக்கப்பட்டனர்.
இதோ வந்து விட்டோம் கெய்ஜி. இது தான் நம்முடைய வீடு!
ஆமாம்!
யசுடோ், இங்கே பார்! அப்பா சித்திரம் வரைய வண்ணக் கலவை வைத்திருக்கும் கோப்பை எப்படி உருமாறி இருக்கு!
கடுமையான உஷ்ணம் தான் இதற்குக் காரணம்! கமான் நாம் போய்த் தோண்டுவோம்!
உஷ்! உஷ்!
உப்! உப்!
கெய்ஜி - நாம் கண்டு பிடித்து விட்டோம்
இது தான் நம் அப்பா.
அப்பா.....
தொடரும்.

# கதை சொல்லும் படங்கள் 15

S. விஜயன்



சித்திரங்கள் முழுவதும் ரெடி...! வசனங்களை முறையாக பலூனில் பொருத்தி - சரியான இடங்களில் ஒட்டியாகிவிட்டது! So - சித்திரக் கதை தயார் என்று நினைத்து விடாதீர்கள்! இன்னுமொரு ''அதிரடியான'' பணி பாக்கியுள்ளது!

அதுதான் - **டமால்! டுமீல்!** **ஆ...ஆ...! டூம்-டூம்** போன்ற Sound effects ஐ சேர்க்கும் வேலை!

டெக்ஸ் வில்லர் போன்ற கௌ-பாய் **கதைகளை** எடுத்துக் கொண்டால் - ஏகப்பட்ட துப்பாக்கிச் சண்டைகள் இடம் பெறும்! துப்பாக்கி வெடிக்கும் ஓசையினை வெளிப்படுத்த **'டமால்'**, **'டுமீல்'** போன்ற சத்தங்களை இறுதியாக சேர்த்தாக வேண்டும்! வெடி வெடிக்கும் ஓசை; விமானம் அல்லது கார் சீறிச் செல்லும் ஓசை; இடி முழக்கத்தின் ஓசை என்று பலவிதமான Sound effects கதைக்கேற்ப அமைத்திட வேண்டும்! உலக யுத்தக் கதைகளை தயாரிக்கும் போது இந்த விஷயத்தில் நிறைய




கவனம் செலுத்திடத் தேவை!

பிஸ்டல் அல்லது ரிவால்வர் துப்பாக்கி வெடிக்கும் போது **'டுமீல்'**, **'டும்'** என்ற ஒற்றை வெடி சத்தம்....

ரைபிள், மிஷின் கன் போன்ற கனரகத் துப்பாக்கிகள் தொடர்ந்து ஒலிக்கும் போது **'ரட் - ட்ட்ட - டட்'** என்ற சப்தம்....

பீரங்கிகள், டாங்குகள் சுடும் போது **'பூம்'** என்ற ஆழமான ஓசை....

என்று பலவிதமான effects இருக்க வேண்டும்! பெரும்பாலும் இந்த ஓசைகளை கையால் எழுதினால் தான் எடுப்பாக இருக்கும்! அச்சுக் கோர்க்கப்பட்ட எழுத்துக்களை ஒட்டினால் எடுபடாது! எழுதும் போது கூட பீரங்கி ஒலிக்கும் **'பூம்'** சத்தம் அளவில் பெரிதாகவும்; துப்பாக்கியின் **'டுமீல்'** சத்தம் சிறிதாகவும் இருந்திட வேண்டும்!

இந்த Sound effects முழுவதையும் தயார் செய்து எழுதி முடித்து விட்டால் கதை ரெடி! நேராக எடிட்டரிடம் அனுப்பலாம்!

இத்தனை பாடுபட்டு - பல பேர் வியர்வையின் பலனாக உருவாக்கப்படும் ஒரு கதையின் இறுதித் தலையெழுத்தை நிர்ணயிக்கப் போகும் ஆசாமியே - எடிட்டர்!

எடிட்டரின் பணி பற்றி அடுத்த இதழில்...

*அடுத்த இதழில் கட்டுரை முடியும்...!*

விரைவில் வருகிறது!





## வாசகர் ஹாட் - லைன்



எனது மதிப்பிற்குறிய லயன் Comics ஆசிரியர் விஜயன் அவர்களுக்கு. தங்களின் நீண்ட நாள் வாசகன் என்ற முறையில் தங்களிடம் சில கருத்துக்களை பகிர்ந்து கொள்வதற்கு எனக்கு உரிமை உள்ளது என நான் எண்ணுகின்றேன்.

நான் ஆரம்ப காலங்களில் படித்த லயனுக்கும் தற்போது படித்துக் கொண்டிருக்கும் லயனுக்கும் ஏகப்பட்ட மாற்றங்கள். அது ஏனென்று தான் எனக்கு இன்னமும் விளங்கவில்லை. நீங்கள் லயனுக்கு விலை எவ்வளவு வேண்டுமாயினும் போட்டுக் கொள்ளுங்கள். ஆனால் விலைக்கு தகுந்த தரத்தை தயவுசெய்து கொடுங்கள்.

**ஆரம்ப நாட்களில் மொழிபெயர்ப்பு தரம் மிகுந்து லயன் வெளி வந்தது.** தற்போது ஏதோ கடமைக்கு லயன் வெளியிட்டு கொண்டிருக்கின்றீர்கள். **வாசகர் ஸ்பாட் லைட் என்று கூறி மூன்றாம் தரக் கதைகளை வெளியிட்டுக் கொண்டிருக்கின்றீர்கள்.**

என்னை லயன் Comics ன் நீண்ட நாள் வாசகனாக ஆக்க அடித்தளமாக அமைந்தது ஆரம்பகால லயன் Comics ன் மொழிபெயர்ப்பே.

தற்போது கூட ''ஒரு வீரனின் கதை'' ''முத்து'' comics, மொழிபெயர்ப்பு தரம் மிகுந்ததாக இருந்தது.

(April) 1995 ல் வெளி வந்த 'பீட்டர் ஃபாலண்டைன்'' ன் 'நடுக்கடல் நரகம்' இதழில் ஆரம்பத்தில் ''இரண்டாம் உலக யுத்தம் முடிந்திருந்த காலமது! உலகெங்கும் ஆதிக்கம் செலுத்தி வந்த இங்கிலாந்தின் அடிமை ராஜ்யங்கள் படிப்படியாக விடுதலையடைந்து கொண்டிருந்தன. தென்மண்டலத்தின் பெரும்பகுதி, இன்னமும் நாகரீகத்தின் பிடியில் சிக்காமல் பழமையில்.....

இந்த எழுத்துக்கள் நீண்ட நாட்களுக்குப் பின்னர் என்னை மகிழ்ச்சியடைய செய்தது. இது போன்ற இதழ்களைத்தான் நான் இன்னமும் தேடிக் கொண்டிருக்கின்றேன்.

**மேலும் தற்போது வரும் TITLE கூட** சரியில்லை. ''புலிவருது, மியாவ் மியாவ் மரணம்'' சூ மந்திகாளி! இதெல்லாம் என்ன சார் TITLE? ஏன் சார் இப்படி செய்கின்றீர்? இதெல்லாம் தேவைதானா? விளம்பரத்திற்கும் வியாபாரத்திற்குமாக ஒரு சில வாசகர்களை கவருவதற்காக நீங்கள் போடும் ஸ்டண்ட் வேலைகள் எல்லாம் என் போன்ற ஒரு சில ரசிகர்களின் மனதைப் பாதிக்கும் விசயமாக மாறி விடுவதை நீங்கள் உணர மாட்டீர்கள்.

தரமான கதைகளை தரமான மொழிபெயர்ப்புடன் இனி வரும் நாட்களில் நான் எதிர்பார்க்கின்றேன்.

மேலும் என் போன்ற சில வாசகர்களிடமிருந்து இது போன்ற கடிதங்கள் வருவதை தடுப்பதற்காகவாவது இனி கவனமுடன் செயல்படுவீர்கள் என்று நம்புகின்றேன்.

இப்படிக்கு,
என்றென்றும் Lion Comics ல் தரத்தினையும் புதுப் பொலிவினையும் எதிர்பார்த்து காத்திருக்கும் தங்களின் நீண்ட மற்றும் இனி வரும் காலம் வரை இருக்கும் ரசிகன்.

**K. Balasubramanian,**
Sri Chakra finance,
11-B, Hospital Road,
Kattuputhur - 621207.



லயன் Comics ன் சாதனைகள் மேலும் மேலும் தொடர எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

நன்றி!



## ஆசிரியர் பதில் :

'ணங்' என்று மண்டையில் குட்டு விழுந்த சத்தம் உங்களுக்கும் கேட்டிருக்குமே! மண்டையை தடவிக் கொண்டே எழுதிய பதில் இதோ :

### புகார் 1 : மொழிபெயர்ப்புத் தரம் சரியில்லை :

இந்தக் complaint ல் எத்தனை தூரம் substance உள்ளது என்பதை என்னால் கணிக்க முடியவில்லை. கதைகளைக் குறிப்பிட்டு "இந்த இதழ்களெல்லாம் சுமாரான மொழிபெயர்ப்போடு இருந்தன" என்று புகார் செய்திருந்தால் பரவாயில்லை! ஒட்டு மொத்தமாக எல்லாக் கதைகளிலும் மொழிபெயர்ப்பு சரியில்லை என்று சொல்வது நியாயமில்லையே?! நமது காமிக்ஸ்களுக்கு ஆரம்பத்திலிருந்து இன்று வரை மொழிபெயர்ப்பு செய்து வரும் குழு சிறிதும் மாறவில்லை! அப்படியிருக்க மொழிபெயர்ப்புத் தரம் குறைந்துவிட வாய்ப்பில்லையே!

எல்லாக் கதைகளுக்கும் நாங்கள் uniform ஆக ஒரே பாணியில் மொழிபெயர்ப்பு செய்வதில்லை! ஒவ்வொரு கதைக்கும் / கேரக்டருக்கும் ஒரு style இருக்கும். அதைப் பின்பற்றியே எங்கள் மொழிபெயர்ப்பும் அமைந்திடும்:

ரிப் கிர்பி கதைகள் என்றால் ஒரு refined ஸ்டைல்... மாடஸ்டி கார்வின் கதைகள் என்றால் ஒரு சரளமான பாணி... டெக்ஸ் வில்லர் போன்ற கௌ-பாய் கதைகளுக்கு வேறு மாதிரி treatment... லக்கி லூக் போன்ற கார்ட்டூன் கதைகளுக்கு ஹாஸ்யம் கலந்த யதார்த்தமான பாணி...

இப்படி நிறையவே சின்னச் சின்ன விஷயங்களை கவனத்தில் வைத்திருப்போம்.

நீங்கள் சொல்வது போல "நடுக்கடல் நரகம்" , **வீரனின் கதை** (முத்து காமிக்ஸ்) போன்ற கதைகள் சிறப்பாக அமைந்திருக்கலாம். காரணம் - அவற்றின் ஆங்கில ஒரிஜினல் வசனங்கள் grand ஆக இருந்திருக்கும்!

அப்புறம் இன்னொரு விஷயமும் விளக்கியாக வேண்டும்! சில சமயங்களில் ஆங்கிலத்தில் 'நறுக்' என்று ஓரிரு வரிகளில் சொல்லப்படும் விஷயத்தை தமிழில் கொண்டு வர பலவரிகள் தேவைப்படலாம். ஆனால் அவ்வளவு வசனத்தை நுழைத்திட இடமிருக்காது. So - அதுபோன்ற சமயங்களில் கொஞ்சம் edit பண்ண வேண்டியது வரும். So - மொழிபெயர்ப்புத் தரம் குறைந்து விட்டது என்று சொல்வதை விட நமது வாசகர்களின் தரமும், எதிர்பார்ப்புகளும் கூடிவிட்டது என்று சொல்வதே பொருத்தமாக இருக்குமென்று நினைக்கிறேன்!

'ஐஸ்' வைக்கிறேன் என்று நினைத்து விடாதீர்கள்! **"ஸ்பாட் - லைட்"** பகுதிக்கு வரும் வாசகர்கள் படைப்புகளில் என் கவனத்தை ஈர்த்த முதல் அம்சமே - வசன நடை தான்! நமது காமிக்ஸ்களில் வரும் sytle ஐ மிக நுணுக்கமாக follow செய்து கிட்டத்தட்ட அனைவருமே பிசிறில்லாத வசனங்களை உருவாக்கியுள்ளனர்!

## புகார் 2 : "வாசகர் ஸ்பாட் - லைட் வேஸ்ட்! :

போன மாத இதழிலேயே இது பற்றி எழுதி விட்டேன்! இனி வரும் **ஸ்பாட் - லைட்** பகுதி சிறிதாகவே இருக்கும்!

## புகார் 3 : "கதைகளுக்கான தலைப்பு சரியில்லை" :

"மியாவ்... மியாவ்... மரணம்" தலைப்பு சற்றே கோணங்கித்தனமாக இருப்பதை ஒத்துக் கொள்கிறேன். ஆனால் - கதைக்குப் பொருத்தமான தலைப்பு தானே?

**"புலி வருது"** (மாடஸ்டி பிளைஸி சாகஸம்) கதையைப் பொருத்த வரை உங்கள் எண்ணம் தவறு! ஆகஸ்ட் அல்லது செப்டம்பரில் வரவிருக்கும் இந்த சாகஸத்தைப் படித்துப் பார்த்த பிறகு நீங்களே இந்தத் தலைப்பிலுள்ள logic ஐ புரிந்து கொள்வீர்கள்.

**"சூ மந்திரகாளி"** - லக்கி லூக் கார்ட்டூன் கதைக்கான தலைப்பு! கார்ட்டூன் கதைக்கு வேடிக்கையான தலைப்பு கொடுப்பதில் வியப்பு தேவையில்லையே?

மற்றபடிக்கு நமது தலைப்புகள் எல்லாமே நன்றாக இருப்பதாகத் தான் நான் நினைக்கிறேன் (ஏரியில் ஒரு எரிமலை; பலி கேட்ட புதையல்; வேங்கை வேட்டை; மந்திர மண்ணில் மாடஸ்டி etc...etc...)



அன்புடன்,
**S. விஜயன்.**

விரைவில் வருகிறது!

## டெக்ஸ் வில்லர் குழுவின் அதிரடி சாகஸம்!





விரைவில் வருகிறது!
கேப்டன் பிரின்ஸ் குழுவினர் தோன்றும்
லயன் காமிக்ஸ்
புரட்சிப் புயல்!
புத்தம் புதிய சாகஸம்!
ரூ. 6·50

## ஆண்டுச் சந்தா

லயன் காமிக்ஸ் - ஓராண்டுச் சந்தா - ரூ. 75/-

முத்து காமிக்ஸ் - ஓராண்டுச் சந்தா - ரூ. 60/-

ஓராண்டுக்குக் குறைவான சந்தா
ஏற்க இயலாது.

## திருச்சி மற்றும் அருகாமையிலுள்ள நகர வாசகர்கள் கவனத்திற்கு :

நமது புதிய காமிக்ஸ் வெளியீடுகள் அனைத்தும் கீழ்கண்ட முகவரியில் மாதந்தோறும் கிடைக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

**ஸ்ரீ லக்ஷ்மி புத்தக நிலையம்,**
3, நடுகுஜிலி தெரு,
(காமாட்சியம்மன் கோவில் எதிரில்)
பெரிய கம்மாள தெரு, திருச்சி - 8.


லயன் காமிக்ஸின்
12-வது
பிறந்த நாளைக்
கொண்டாடும் வகையில்
ஜூலை 1.ல்
வருகிறது!
ஆண்டு மலர்!